இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பு - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கண் வங்கி பொறுப்பின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட ஆளுகைத் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத:துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும்

நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கண் வங்கி பொறுப்பின் பணிகளை தொடர்ச்சியான மீளாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கண் வங்கி பொறுப்பின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- கண் வங்கி பொறுப்பு தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

சுகாதார அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் கொழும்பு தேசிய கண் மருத்துவமனையில் நிறுவப்பட்ட இலங்கை தேசிய கண் வங்கி 2023 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 2023 இன் 22 ஆம் இலக்க இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்புச் சட்டத்தின் மூலம் பார்வையிழப்பை ஒழித்தல் மற்றும் தடுக்கக்கூடிய பார்வையிழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன், ஒரு தனி நிறுவனக் கட்டமைப்பில் இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பு நிறுவப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், 2023 ஒக்டோபர் 13 முதல் திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கான இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பின் நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்தக் காலப்பகுதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் தொடர்பான நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. மீளாயவாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்ட தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில், இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட கணக்கு மீதிகளை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்னவருமாறு		
(i) நியமத்தின் 30 (ஆ) பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய	கணக்குகளை தயாரிக்கும் மென்பொருளில் காணப்படும் இந்தப் பிழை, 2025 ஆம் ஆண்டுக்கான கணக்குக்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு

காசுப் பாய்ச்சலை தீர்மானிப்பதற்காக, தேய்மானம் போன்ற காசல்லாத உருப்படிகள் சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், பொறுப்பின் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது, வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா. 5,788,009 ஆன ஆண்டிற்கான தேய்மானத்தை செயற்பாட்டு நடவடிக்கைகளின் சரிசெய்வதற்குப் பதிலாக, அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட சொத்துக்களுக்காக ஆண்டின் ஆரம்ப திகதி வரை ஒதுக்கப்பட்ட திரட்டப்பட்ட தேய்மானம், ரூபா. 957,095 தொகையை ஆண்டிற்கான தேய்மானத்திலிருந்து நீக்கப்பட்டு, ரூபா. 4,830,914 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் திரட்டிய தேய்மானமாக குறிப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.	கூற்றுக்களில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ii) நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர நிறுவனத்தினால் முதலீடு மற்றும் நிதிச் செயற்பாட்டுகளினால் வரும் தேறிய பணக் கொடுப்பனவுகளில் பிரதான வகுப்புகளுக்கு வெவ்வேறாக நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் வகுப்புகளுக்கு வேறாக அறிக்கையிட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தன.		
• மீளாய்வாண்டில், கண் வங்கி பொறுப்பினால் கையேற்கப்பட்ட ரூபா. 17,400,988 பெறுமதியான Specular microscope இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக, நன்கொடையாகச் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய பொறுப்புச் சபை ரூபா 15,000,000 தொகையை குறித்த விநியோகத்தருக்கு செலுத்தியிருந்ததுடன் எஞ்சிய ரூபா 2,400,988 தொகையானது ஆண்டின் இறுதியில் கண் வங்கி பொறுப்பினால் செலுத்தப்பட	- மேற்படி -	- மேற்படி -

வேண்டிய தொகையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது, மீளாய்வாண்டில் எந்தவொரு பணக் கொடுக்கல் வாங்கலும் நடைபெறாதிருக்கையில், இந்த ரூபா 17,400,988 தொகையில் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட வேண்டியதாகக் கண்டறியப்பட்ட ஆய்வுகூட உபகரணங்களின் கிரயம் ரூபா. 4,552,073 தொகை கழிக்கப்பட்டு மற்றும் ரூபா 12,848,915 தொகை காசு வெளிப் பாய்ச்சலாக பதிவு செய்யப்பட்டிருந்தது.		
• மீளாய்வாண்டில் ரூபா. 135,936 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், அந்த ஆண்டில், ரூபா 9,074 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள கையகற்றல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அத்துடன், கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 135,936 பெறுமதியிலிருந்து காசுப் பாய்ச்சல் இடம்பெறாத ரூபா 9,074 ஐக் கழித்து ரூபா 126,862 தொகை தேறிய காசு வெளிப் பாய்ச்சலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
• மீளாய்வாண்டின் போது ரூபா 14,200 ஆன மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் கிரயமான ரூபா. 21,247, ஆன மின்சார உபகரணங்களை அகற்றுதலாகச் சொத்துக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படதை காசுப் பாய்ச்சலாகப் பதிவு செய்வதற்குப் பதிலாக, இந்த பெறுமதிக்கு	- மேற்படி -	- மேற்படி -

	ஈடுசெய்யப்பட்டு, ரூபா 7,047 தேறிய காசுப் பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(iii)	ரூபா 113,348 ஆன கணனி உபகரணங்கள் சொத்துக் கணக்கிலிருந்து அகற்றலாக வேறொரு கணக்கொன்றில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவனத்திற்குள் காசு உட்பாய்ச்சலொன்று இல்லாமல் இப்பெறுமதி காசு உட்பாய்ச்சலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(iv)	செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக் கப்பட்ட காசுப் பாய்ச்சலைத் தயாரிக்கும் போது, மீளாய்வாண்டின் இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா. 1,161,279 ஆன ஆண்டிற்கான வட்டி வருமானம் நீக்கப்பட்டு ரூபா 761,561 ஆன ஆண்டில் காசாக கிடைத்த வருமானம் நிதி செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும், கண் வங்கி பொறுப்பினால், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பெற வேண்டிய வருமானத்தில் உள்ள வேறுபாடான ரூபா 37,366 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்கமாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(v)	மீளாய்வாண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 40,886 ஆன முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் நிதிச் செயற்பாடுகளின் காண்பிக்கப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் ரூபா 40,886 ஆன ஆரம்ப மீதிகள் வேறுபாட்டிற்கு மாத்திரம் தாக்கமளிப்பதால் இது காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதாக	- மேற்படி -
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 05 இன் 26 (அ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஐ.அ.டொ. 193,779.32 ஆன சேமிப்பு வைப்பு பெறுமதி ஆண்டின் இறுதி திகதியில் செலாவணி விகிதமான ரூபா 293.18 என கருதி உள்நாட்டு பணத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 05 இன் 22 மற்றும் 23 பந்தி களின் பிரகாரம் அந்நியச் செலாவணி யால் மேற்கொள்ளப் பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றை கணக்கீடு செய்யும் போது ஆரம்ப இனங்காணலின் போது கொடுக்கல் வாங்கல்	இறுதி திகதியில் காணப்பட்ட செலாவணி விகிதத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப் பட வேண்டும்.

	காரணத்தினால் நிதி நிலைமை கூற்றில் வங்கி மீதி ரூபா 6,477,925 தொகை கூடுதலாக மீளாய்வாண்டில் மிகையும் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	இடம்பெற்ற திகதியில் காணப்பட்ட Spot Exchange Rate இன் பிரகாரம் இருந்ததால் இது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக	
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று பயன்பாட்டு நிலைமைக்கு தயார்படுத்தப்படும் நிலைமைக்கு கொண்டு வந்த பின்னர் பெறுமானத்தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொறுப்பினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவின் போது பெறுமானத்தேய்வு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த ரூபா 601,186 ஆன சொத்துக்களுக்குரிய ரூபா 95,052 ஆன பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்நிதிக் கொள்கை களை பேணிச் செல்வதற்கு பொறுப்பின் அங்கீகாரம் கிடைத்து உள்ளதாகவும் இது நிதிக் கூற்றுகளில் கணக்கீட்டுக் கொள்கைகளில் வெளிப்படுத்தியுள்ளதாக	நியமத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகள் மாற்றப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்படாவிட்டால் செயற்பாடற்ற அல்லது செயற்பாட்டில் இருந்து அகற்றிய போதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் செயற்பாட்டில் பயன்படுத்தப் படாமல் காணப்படும் ரூபா 4,695,742 ஆன சொத்துக்களுக்குரிய மீளாய்வாண்டிற்காக ரூபா 957,094 ஆன பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்களில் சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக	செயலற்றுக் காணப்படும் சொத்துக் களுக்காக உரிய பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2023 இன் 22 ஆம் இலக்க இலங்கை தேசிய கண் வங்கி பொறுப்பு சட்டம்			
(i) சட்டத்தின் 3 (உ) உப பிரிவு	கண் அறுவை சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் இழையம் மற்றும் பிற வில்லைகளைப் பெறுவதற்கு இழைய ஒருங்கிணைப்பாளர்களுக்குப	எதிர்காலத்தில் புதிய இழைய ஒருங்கிணைப்பாளர் களை ஆட்சேர்க்கும் போது, தேவையான மாற்றங்களுடன்	சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

		பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றாலும், அத்தகைய பயிற்சிக்கான முறையான வழிமுறையை அந்த பொறுப்பினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	வேண்டும். .
(ii)	சட்டத்தின் 3 (ஊ) உப பிரிவு மற்றும் சட்டத்தின் 3 (எ) உப பிரிவு	கண் அறுவை சிகிச்சை களுக்குத் தேவைப்படும் கருவிழி மற்றும் பிற வில்லைகளை இணைப்பதற்காக அரச மருத்துவமனைகளுக்கு இலவசமாக வழங்கு வதற்கும் கண் அறுவை சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் மிகையான கருவிழி மற்றும் பிற வில்லைகளை ஏனைய நாடுகளுக்கு வழங்குதல் மற்றும் அதற்காக நிர்ணயிக்கப்படும் செயலாக்கக் கட்டணத்தை அவர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக, பொறுப்பினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
		• தனியார் மருத்துவ மனைகளுக்கு கரு விழிகளை இலவசமாக வழங்குவதற்கோ அல்லது முன்னர் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை அறவிட்டு வழங்கு வதற்கு எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படா திருந்த போதும் மீளாய்வாண்டில் 143 கரு வில்லைகள் தனியார் மருத்துவமனை களுக்கு வழங்கப்பட்டிருந்தன.	அனைத்து உள்ளுர் தனியார் மருத்துவமனைகளு க்கும் வெளிநாடுகளுக்கும் வழங்கப்படும் கரு வில்லைகளுக்கு முன்னர் குறிப்பிடப் பட்ட கட்டணங்கள் அறவிடப்படுவதாகவு ம் மேலும் இந்த நோக்கத்திற்காக எந்த வகையிலும் சட்டத்தில் வரையறை ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதாக.	- மேற்படி -
		• ஒரு இழையத்தைச் செயலாக்குவதற்கான செலவு ரூபா. 59,977	2019 ஆம் ஆண்டில் அப்போதைய சுகாதார சேவைகள்	- மேற்படி -

		ஆக இருந்த போதிலும், பொறுப்பாண்மையானது இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கு ஒரு கரு இழையத்தை ரூபா. 15,980 இற்கு வழங்கியிருந்தது.	பணிப்பாளர் நாயகம், மொத்த செயலாக்கக் கட்டணத்தை அல்லாமல், கண் இழைய சேமிப்பு ஊடகத்தின் கட்டணத்தை மாத்திரம் அறவிடுவதற்கு தீர்மானித்திருந்தார். மேலும், அந்தக் கட்டணமானது கண் இழைய சேமிப்பு ஊடகத்திற்கான கட்டணமாகக் கருதப்பட்டு, அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்குப் பொருந்தக்கூடிய கரு விழிகளை சேமிக்கும் ஊடகத்தின் கிரயமாக ரூ. 15,980 மாத்திரம் அறவிடப்பட்டதாக.	
		• தனியார் மருத்துவ மனைகளால் இழையத் தேவைப்பாடு உடைய நபருக்கு வில்லைகளை வழங்கும் போது, அதற்காக அறவீடு செய்யப்படும் தொகையை ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.	தனியார் மருத்துவ மனைகளால் கரு வில்லைகளுக்கான சிகிச்சைக்கு அறவிடப்படும் தொகை தொடர்பாக ஒழுங்குபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்காக சட்டத்தினால் எந்தவொரு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதாக	சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாமல் கரு வில்லைகளை தனியார் வைத்திய சாலைகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தை விட குறைந்த தொகைக்கு வழங்குவதால் ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	சட்டத்தின் 6 (5) உப பிரிவு	சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரேனும், வருகை தராததற்குத் தலைவரின் முன் அனுமதியைப் பெறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தவறினால், அந்த உறுப்பினர் மூன்றாவது கூட்டத்தின்	இந்தப் பிரதிநிதிகள் கண்டி மற்றும் ஜயவர்தனபுர மருத்துவமனை களில் பணி புரிவதால் 2025 ஆம் ஆண்டு முதல் zoom தொழில் நுட்பத்தின் மூலம்	

		முடிவில் தனது பதவியை இராஜினாமா செய்ததாகக் கருதப்படுவார். இருப்பினும், இலங்கை கண் மருத்துவர் கல்லூரியினால் பேரவையால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியும், இலங்கை மருத்துவ சபையால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியும் முறையே 06 மற்றும் 04 தொடர்ச்சியாக கூட்டங்களில் கலந்து கொள்ளாததாலும், சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருககக்கவில்லை	தொடர்பு படுத்தப் பட்டுள்ளதாக	
(iv)	சட்டத்தின் 11 (ஊ) உப பிரிவு	கண் அறுவை சிகிச்சைக்குத் தேவைப்படும் இழைய உறுப்பு தானம் செய்பவர்களின் பதிவேடும் தரவுத்தளமும் சுகாதார விடயம் கையளிக்கப் பட்டுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், ஆனால் தரவு சமூகமொன்று பேணிச்செல்லப்பட்டு இருந்த போதிலும், தரவுத்தளம் ஒன்று (Data Base) பராமரிக்கப்பட்டிருக்க வில்லை.	பதிவேட்டுடன் ஆரம்ப தரவுகள் பெயர், முகவரி, அங்கத்துவ திகதி மற்றும் அங்கத்துவ இலக்கம் போன்ற அடிப்படைத் தரவுகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும். ஆனால், இந்த விஷயங்கள் எதிர்கால பணிப்பாளர் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, தேவையான தரவுகளுடன் செயலாளரின் அங்கீகாரத்துடன் ஒரு தரவுத்தளம் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	- மேற்படி -
(v)	சட்டத்தின் 11 (ஓ) உப பிரிவு	தொடர்புடைய நியமங்களின் அடிப்படையில் கரு வில்லைகளைப் பெற்றுக் கொள்வது மாற்று அறுவை சிகிச்சை செய்வது தொடர்பாக ஒரு ஒழுக்காற்று கோவை யொன்றை தயாரித்தல் கண் வங்கி பொறுப்பினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், எந்தவொரு ஒழுக்காற்று	ஒழுக்காற்று முறைமையொன்று தயாரிக்கப்பட வில்லையெனவும் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை கூட்டங்களில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தி முறையான ஒழுக்காற்று முறைமையொன்றை	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று கோவை யொன்றைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

		கோவையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	
(vi)	சட்டத்தின் 17 (4) உப பிரிவு	வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் ஐந்தொகை ஆகியவற்றுக்கு கையொப்பமிடுவதற்காக சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் அதிகாரமுள்ள சபையின் உறுப்பினர்களால் கையொப்பமிடல் இடப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து பொருத்தமான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கையொப்பமிடுவத ற்காக அதிகாரமுள்ள அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
(vii)	சட்டத்தின் 19(1) உப பிரிவு	அமைச்சரால் சபையுடன் கலந்தாலோசித்த பிறகு, பொறுப்பின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரில் ஒருவரை பொறுப்பின் பதவியணிக்கு நியமிக்கப்பட வேண்டியதுடன் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு இச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படுகின்ற விதிகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், பொறுப்பிற்காக விதிகளை உருவாக்கி பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் அமைச்சரால் நியமிக்கப்பட்டி ருக்கவில்லை.	பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் விசேட தகைமைகள் பெற்ற ஒரு மருத்துவரை தற்காலிகமாக நியமித்தாகவும் எதிர்காலத்தில் அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக	பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராக நிரந்த நபரொருவரை எதிர்காலத்தில் அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் நியமிக்கப்பட வேண்டும்.
(viii)	சட்டத்தின் 20 ஆம் பிரிவு	அமைச்சரால் சுகாதார விடயம் ஒப்படைக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளருடன் கலந்தாலோசித்து, கண் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ள அல்லது வெளிவாரி கண் நோய் கண் அறுவை சிகிச்சை, இழைய மருத்துவம் அல்லது வெளியக கண் நோய் தொடர்பான	பொறுப்பினால் மருத்துவ பணிப்பாளர் ஒருவரை முன்மொழிந்து தற்காலிகமாகப் பொறுப்புகளைக் கவனிப்பதற்காக நியமிப்பதாகவும் எதிர்காலத்தில் சுகாதார அமைச்சரின்	அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஒரு நிரந்தர மருத்துவ பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும்.

		ஆராய்ச்சி கற்பித்தல் அனுபவத்துடனான அல்லது கண் மாற்று அறுவை சிகிச்சைகள் தொடர்பான அனுபவம் பெற்ற ஒரு விசேட கண் மருத்துவரை பொறுப்பின் மருத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும். இலங்கை கண் வங்கியின் மருத்துவ பணிப்பாளராக பொறுப்பின் மருத்துவ பணிப்பாளராகப் பணியாற்றி வருவதுடன், அமைச்சரால் அவரை அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	
(ix)	சட்டத்தின் 21(1) உப பிரிவு	சபையின் வேண்டுகோளின் பேரில், அரச சேவையில் உள்ள எந்தவொரு உத்தியோகத்தருக்கும், அந்த உத்தியோகத்தரின் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் விபரத்துடன், சபையால் தீர்மானிக்கப்படும் ஒரு காலத்திற்கு பொறுப்பின் பதவியணிக்கு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நியமிக்கப்படலாம் என்ற போதிலும், பொறுப்பில் பணிபுரியும் 23 அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை.	இலங்கை தேசிய கண் வங்கித் செயற்திட்டத்தில் பணியாற்றிய அதே பணியாளர்கள் பொறுப்பாண்மையிலும் பணியாற்றி வருகின்றதாகவும் எதிர்காலத்தில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக.	பொறுப்பில் பணியாற்றும் ஊழியர்களுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
(x)	சட்டத்தின் 27 ஆம் பிரிவு (2) (1) (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) உப பிரிவுகள்	அமைச்சரால் சபையுடன் கலந்தாலோசித்த பின்னரே விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிப்பட்டிருந்த போதிலும், கண் அறுவை சிகிச்சைக்குத் தேவையான திசுக்கள் மற்றும் பிற திசுக்களைச் சேகரிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், திசுக்கள் மற்றும் பிற திசுக்களின் தரம், திசுக்களைப் பெற்றுக்கொள்ளும் போதும் மாற்று அறுவை சிகிச்சை	தற்போது கட்டளை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றதாகவும், அவை எதிர்காலத்தில் அமைச்சரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதாக	இதுவரை இந்த கட்டளைகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன் அவற்றை விரைவாகத் தயாரித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

		செய்யும் போதும் பின்பற்றப்பட வேண்டிய மருத்துவ மற்றும் தர நிர்ணய நடைமுறைகள், இலங்கை அல்லாத மக்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்கள், பிற நாடுகளுடன் பகிர்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை மற்றும் இலத்திரனியல் முறையில் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பான அக்கட்டளைகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.		
(xi)	சட்டத்தின் 28 ஆம் பிரிவு (2)(1) (அ), (ஆ), (இ) (ஈ) உப பிரிவுகள்	வழங்கப்பட்ட அதிகாரங்களின் விரிவாக்கத்திற்குப் பாதகமின்றி சபையால் விதிகளை உருவாக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், இழைய ஒருங்கிணைப் பாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிகள், கண் அறுவை சிகிச்சைக்குத் தேவையான விசேட இழயங்கள் மற்றும் பிற இழயங்களை இலங்கையர்களுக்கு வழங்கும் நடைமுறை, திசு ஒருங்கிணைப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயிற்சி அளிப்பதற்கான நடைமுறை மற்றும் சட்டத்தின் கீழ் வைக்கப்பட வேண்டிய மற்றும் பராமரிக்கப்பட வேண்டிய பெயர் பதிவேடுகளைப் பராமரித்தல் ஆகியவை தொடர்பான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் தயாரிப்பதாக	தொடர்புடைய விதிகளை விரைவாகத் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(2) உப பிரிவு	நிதிக் கட்டுப்பாட்டிற்காக நிறுவப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயலாற்றல் தொடர்பான எழுத்துப்பூர்வமான மீளாய்வை மேற்கொண்டு அதன் பிரதியொன்றைத்	பொறுப்பில் மனித வளப் பற்றாக்குறை யொன்று காணப்படுவதுடன் உரிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர்	குறித்த முறைமையின் ஆக்கபூர்வதன்மை யை மீளாய்வு செய்து அதன் பிரதியொன்றைத் கணக்காய்வாளர்

		கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கபட வேண்டிய போதிலும் பொறுப்பு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.	இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக	தலைமை அதிபதிக்கு சமர்ப்பட வேண்டும்.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவை மற்றும் செயற்பாடுகள் கையேடு			
(i)	வழிகாட்டல் கோவையின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பந்தி	குறிக்கோள்களை அடைவதற்காக, ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய தந்திரோபாயத் திட்டம் ஒன்று, தயாரிக்கப்பட்டு அத் திட்டத்தை தொடர்புடைய வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாகப் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குத் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் செயல் நடவடிக்கைத் நடவடிக்கைத் திட்டம் மற்றும் தந்திரோபாய திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் அது நிறைவடைந்தவுடன் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	தொடர்புடைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டு, அதற்கேற்ப செயற்பாடுகள் செயல்படுத்தப்பட வேண்டும்.
(ii)	வழிகாட்டல் கோவையின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி	அனைத்து பொது முயற்சிகளும் பதவியணியினருக்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பதவிகள் உருவாக்கப்பட்ட பிறகு, அப்பதவி யணியினருக்காக பொது திறைசேரியின் அங்கீகாரத் திற்காகச் சமர்ப்பிக்கப்படும்.	திறைசேரியின் அங்கீகாரம் விரைவாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(iii)	செயற்பாட்டு: கைநூலின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பந்தி	பதவியணியினர் எண்ணிக்கை, ஆட்சேர்ப்புத் முறைமை திட்டம், சம்பளக் கட்டமைப்பு மற்றும் படிகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதவியணியினர் எண்ணிக்கை, ஆட்சேர்ப்பு முறைமை திட்டம், சம்பளக் கட்டமைப்பு மற்றும் படிகள் ஆகியவை எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்.	தொடர்புடைய அங்கீகாரத்தைத் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம ிருந்து விரைவில் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும்.
(iv)	செயற்பாட்டு: கைநூலின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.3 ஆம் பந்தி	ஒவ்வொரு பிரிவின் ஊழியர் தேவைகள் மற்றும் நிறுவன அமைப்பு விளக்கப்படத்தை உள்ளடக்கிய ஒரு தந்திரோபாய மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு பிரிவின் பணியாளர் தேவைகள் மற்றும் நிறுவன அமைப்பு விளக்கப்படத்தை உள்ளடக்கிய ஒரு மூலோபாய மனிதவளத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	செயற்பாட்டுக் கையேட்டின் பிரகாரம் ஒரு தந்திரோபாய மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
(v)	செயற்பாட்டு: கைநூலின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.4(i) ஆம் பந்தி	நிறுவனமொன்றினால், அதன் மனிதவளத் தேவைகள் முறையாகக் கண்டறியப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியதுடன், தற்போதுள்ள வெற்றிடங்கள் மற்றும் உருவாக்கப்பட வேண்டிய புதிய பதவிகள் தொடர்பாக கவனம் செலுத்தி அந்தப் பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறை, கூடிய மற்றும் குறைந்தபட்ச வயது எல்லை தொழில் விவரம், தேவையான கல்வி, தொழில்முறைத் தகைமைகள் மற்றும் தொழில் அனுபவம் ஆகியவை இனங்காணப் பட்டிருக்கவில்லை.	அரச முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பதவிகள் உருவாக்கப்பட்ட பிறகு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கபடும் என்பதாக.	மனிதவளத் தேவைகள் முறையாகக் கண்டறியப்பட்டு, செயற்பாட்டு கைலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	(vi) செயற்பாட்டு: கைநூலின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பந்தி	தந்திரோபாய திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாக கொண்டு செயற்திறனான செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் தந்திரோபாய திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் அது நிறைவடைந்தவுடன் செயலாற்றல் மதிப்பீ டொன்று அறிமுகப் படுத்துவதாக	திட்டத்தைத் தயாரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
	(vii) செயற்பாட்டு: கைநூலின் 7 ஆம் அத்தியாயத்தின் 7.5 ஆம் பந்தி	பொறுப்பானது காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளைத் தயாரித்து, அந்த அறிக்கைகளை தொடர்புடைய அமைச்சிற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது இரண்டு முகாமை உதவியாளர்கள் மாத்திரமே பணியாற்றி வருவதாகவும், பொது முயற்சிகள் சேவைகள் திணைக்களத்தால் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதுடன் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.	செயலாற்றல் அறிக்கைகள் தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களத்திற் கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை			
	(i) VI ஆம் அத்தியாயத்தி ன் 2.1 ஆம் பிரிவு	நிரந்தர அடிப்படையிலோ, தகுதிகாண் அடிப்படையிலோ, ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது வேறு வகையிலோ ஒரு உத்தியோகத்தர் ஒரு பதவிக்கு நியமிக்கப்படும்போது, அவருக்கான நடத்தைப் பதிவுத் தாள் உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், அந்த நடத்தைப் பதிவுகள் உத்தியோகத்தர்களின்	பதவிகள் உருவாக்கப்பட்ட பிறகு, பொறுப்பான உத்தியோகத்தர் களின் தனிப்பட்ட கோப்புகளில் நடத்தைப் பதிவுத் தாள் உள்ளடக்குவதாக	நடத்தைப் பதிவுகள் தனிப்பட்ட கோப்புகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

			தனிப்பட்ட கோப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.		
	(ii)	XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு	பொதுப் படிவம் 190 இன் பிரகாரம், அனுமதிக்கப்பட்ட விடுமுறை தொடர்பான பதிவேடு ஒன்று பராமரிக்கப் பட்டிருக்கவில்லை.	அனுமதிக்கப்பட்ட விடுமுறை தொடர்பாக பதிவேடொன்றை பொதுப் படிவம் 190 இன் பிரகாரம் பராமரிக்க நடவடிக்கை எதிர் காலத்தில் எடுக்கப்படும் என்பதாக	அனுமதிக்கப்பட்ட விடுமுறை பதிவேடு ஒன்று பராமரிக்கப்பட வேண்டும்.
(உ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
	(i)	நிதிப் பிரமாணம் 135	செலவினங்கள் ஏற்படுவது தொடர்பாக எந்த நிதி அதிகாரக் கையளிப்பும் வழங்கப்படவில்லை.	தற்போது பணிப்பாளர் குழு தற்போது வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க செயற்படுகிறது என்றும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உரிய பதவிகள் நிறுவப்பட்ட பிறகு எதிர்காலத்திலும் இதனை முறையாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவினம் மேற்கொள்வது தொடர்பாக நிதி அதிகாரம், கையளிக்கப்பட வேண்டும்.
	(ii)	நிதிப் பிரமாணம் 225	அனைத்து கொடுப்பனவுகளுக்கும், பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் முறையாகவும் முழுமையாகவும் நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்டு அனைத்து உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும்	சம்பளம், கூலி, மேலதிக நேர சம்பளம், பொதுக் கொடுப்பனவுகள், கட்டுநிதி, முற்பணங்கள் மற்றும் பிரயாணச் செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்காக இலங்கை கண் வைத்தியாசலை	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொதுப் படிவங்கள், கையளிக்கப்பட வேண்டும்.

		ஒரு குறிப்பிட்ட படிவத்தைப் விசேடமாக பயன்படுத்த வேண்டும் என்றும், சட்டப் படி தேவைப்படும் போதெல்லாம் அந்தப் படிவங்களையே குறிப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்த போதிலும், சம்பளம், கூலி, மேலதிக நேர சம்பளம், பொதுக் கொடுப்பனவுகள், கட்டுநிதி, முற்பணங்கள் மற்றும் பிரயாணச் செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு முறையே 33,36, 35(அ),35, 177/178 போன்ற பொதுவான படிவங்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை.	பயன்படுத்தும் படிவங்கள் பயன் படுத்தப்படுவதாக	
(iii)	நிதிப் பிரமாணம் 257	சான்றளிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரமே பணம் செலுத்தப்பட வேண்டும். மேலும், பற்றுச் சீட்டுகளை அங்கீகரிக்கும் அல்லது பணம் செலுத்தும் ஒவ்வொரு உத்தியோகத்தரும், பற்றுச் சீட்டுகளைச் சான்றளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரியால் அவை முறையாகச் சான்றளிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வது கடமையாகும். இருப்பினும், பணம் செலுத்தும் பற்றுச் சீட்டுகளின் மாதிரிச் சோதனையின் பிரகாரம், தெரிவு பரிசோதனைகளில் 06 சந்தர்ப்பங்களில் சான்றுறுதிப் படுத்தப்படாத பற்றுச்சீட்டு களுக்கு எதிராக ரூபா. 185,370 செலுத்தப்பட்டிருந்தது.	பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் (பதில் கடமை) அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சான்றளிக்கப்பட்டு கொடுப்பனவிற்கு சமர்ப்பிதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	மோசடி மற்றும் பிழைகளைத் தடுக்க அனைத்துப் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சான்றளிக்கப்பட வேண்டும்.
(iv)	நிதிப் பிரமாணம் 260	பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பெறுவோன்	எதிர்காலத்தில் பணம் செலுத்தும்	. உறுதிச்சீட்டு

		வராவிட்டால் பணம் வழங்கும் உத்தியோகத்தர் அவரது அடையாளம் சரிபார்க்கப்படுவதையும், பணம் பெறுபவர் உறுதிச் சீட்டில் கையொப்பமிடு வதையும் உறுதி செய்யட வேண்டுமென குறிப்பிடப் பட்டிருந்த போதும் ஆனால் உறுதிச்சீட்டுகளில் பணம் பெறுபவரின் கையொப்பம் இல்லாமலேயே பணம் செலுத்தப்பட்டிருந்தது.	போது, அனைத்து உறுதிச்சீட்டு களிலும் பணம் பெறுபவரின் பெயர், கையொப்பம் மற்றும் திகதி பெற்று கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்பதாக	களுக்காக பணம் பெறுபவரின் கையொப்பம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும்.
(v)	நிதிப் பிரமாணம் 262 (2)	51 சந்தர்ப்பங்களில், ரூபா. 1,139,197 ஆன கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் அது தொடர்பான பற்றுச் சீட்டுக்களில், ''கொடுப்பனவு செய்யப்பட்டது'' என்ற முத்திரையின்றி கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.	வழங்கப்படும் அனைத்து உறுதிச்சீட்டுகளிலும் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள துணை ஆவணங்களிலும் கொடுப்பனவு செய்யப்பட்டது“ (Paid) “ என்ற முத்திரையைப் பதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	உறுதிச்சீட்டுகளிலும் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள துணை ஆவணங்களிலும் கொடுப்பனவு என்ற முத்திரை பதிக்கப்பட வேண்டும்.
(vi)	நிதிப் பிரமாணம் 454(1)	அரச சொத்துக்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் அனைத்தையும் பொறுப் பேற்றல் மற்றும் வழங்கல் தொடர்பாக பொதுப் படிவம் 44 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உரிய பதவிகள் உருவாக்கப்பட்ட பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	களஞ்சியப் பொருட்களைப் பொறுப்பேற்றல் மற்றும் வழங்குவதற்காக பொதுப் படிவம் 44 பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஊ)	அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் பந்தி	நிறுவனத்தினால் பிரதான பெறுகை திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதுடன், மேலும் குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கை செயற்பாடுகள் பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் ஒரு பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	03 ஆண்டு காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்படும் பெறுகை செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

(எ)	2009 மே 26 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 39 மற்றும் 2020 ஒக்டோபர் 26 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 ஆகியவற்றின் 02(v) பந்தி	சம்பளங்கள் மற்றும் படிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தீர்மானிக்கும் உரிய பதவிக்கு வழங்கப்பட்டிருந்த சம்பன குறியீட்டின் கீழ் மாத்திரமாக இருக்க வேண்டியதுடன் மேலதிகமாக கொடுப்பனவுகளாக அனைத்து படிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டில் இரண்டு முகாமைத்துவ சேவை உதவியாளர்களுக்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 1,645,918 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	சம்பளங்கள் மற்றும் படிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் குறித்த பதவிகள் உருவாக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் வரை கண் இலங்கை தேசிய வங்கித் திட்டத்தில் பணியாற்றிய முகாமைத்துவ சேவை உதவியாளர்களும் பொறுப்பில் சேவை புரிவதாகவும் இதற்காக அமைச்சரவை பத்திரமொன்று அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக.	சம்பளங்கள் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும்
(ஏ)	2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	அனைத்து அரசு நிறுவனங்களும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்களின் அலுவலக வருகை மற்றும் வெளியேறல் பதிவுகளைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சாதாரன வேலை நேரத்திற்குப் பிறகு மேலதிக நேர படிகள் மற்றும் விடுமுறை தினப்படிகள் வழங்கப்பட்டால், அந்த நேரம் கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ள போதிலும் பொறுப்பாண்மை அதற்கேற்ப செயற்படாமல், மீளாய்வாண்டில் மேலதிக நேர மற்றும் விடுமுறை விடுமுறை தினப்படிகளாக ரூபா. 14,841,267 வழங்கியுள்ளது.	கண் வங்கி பொறுப்பும் சுகாதார அமைச்சின் கொள்கைகளுக்கு இணங்க முறையான வருகைப் பதிவுகளைப் பராமரித்து, உரிய சம்பளங்களையும் மேலதிக் நேரப் படிகளையும் வழங்குகிறது.	மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக, கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
(ஐ)	2022 திசெம்பர் 22 ஆந் திகதிய	கூட்டங்கள், செயலமர்வுகள், பயிற்சித் திட்டங்கள்	இது தொடர்பாக அமைச்சரவைப்	மேலதிக படிகளுக்கான

1822/11 ஆம் இலக்க பொது சுற்றறிக்கை கடிதம்	போன்றவற்றில் வளவாளவர்கள், பங்கேற்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பங்களிப்பினை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு கௌரவ, நாளாந்தப் படி மற்றும் விரிவுரைக் கட்டணங்களை வழங்குவது தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளை உரித்தாக்க முடியாத போதிலும் பொறுப்பு, சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 26 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,780,400 கௌரவப் படிகளாக செலுத்தப் பட்டிருந்தது.	பத்திரமொன்று அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தாக.	உரிய அங்கீகாரங்களை பெற்று அதற்கான கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 24,454,662 ஆன மிகையொன்றாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் 1003 கரு வில்லைகள் பெறப்பட்டு அவற்றில் 907 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆண்டில் 96 வில்லைகள் அந்த காலாவதியாகின. 2025 திசெம்பர் 24 ஆந் திகதி மின்னஞ்சல் ஊடாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன. எனினும் ஆண்டின் இறுதியில், பொறுப்பில் 22 கரு வில்லைகள் எஞ்சியிருந்ததாகவும், மேலதிகமாக 6 வில்லைகள் காலாவதியாகி விட்டதாகவும் கணக்காய்விற்கு மேலும் சமர்ப்பிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட படி, இரண்டு சந்தர்ப்பங்களில் முரண்பாடான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மேலும் அந்த ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டவை, வழங்கப்பட்டவை, மீதமுள்ள கையிருப்புகள் மற்றும் காலாவதியான கிருமியழிக்கப்பட்ட வில்லைகள் தொடர்பான ஒரு அறிக்கையிடல் முறைமையொன்று செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கரு வில்லைகள் தொடர்பாக கணக்கீட்டு நடைமுறையொன்று பொறுப்பினால் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதாக	கரு வில்லைகள் தொடர்பாக கணக்கீட்டு நடைமுறையொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
குருநாகல் மற்றும் கண்டி தேசிய மருத்துவமனை களில் இருந்து பெறப்பட்ட கரு வில்லைகள் அந்த மருத்துவமனைகளிலிருந்து பொறுப்பிற்குக் கொண்டு வரப்பட்டு, மாற்று அறுவை சிகிச்சைக்கு உகந்த நிலையில் உள்ளதா எனப் பரிசோதிக்கப்பட்டு. கோரப்பட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்புவதற்காக, அந்தத் வில்லைகள் பொதுப் போக்குவரத்து சாரதிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, பேருந்துகள் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பப்பட்டிருந்தன. இது ஒரு பாதுகாப்பான முறையாக இல்லாததால், பொறுப்பு ஒரு முறையான செயல்முறையைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	இதற்கான ஒரு பாதுகாப்பு முறையொன்றையும் முறையான செயல் நடைமுறை வழிகாட்டலொன்றை முறையையும் தயாரிப்பதற்காக, பணிப்பாளர் சபைக்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதாக	பாதுகாப்பான நடைமுறை ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மனிதவள முகாமைத்துவம் பதவியணியினர் தொடர்பாக பேணப்படுகின்ற தனிப்பட்ட கோப்புக்கள் முறையாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், உத்தியோகத்தர்களின் கல்வி, தொழில் மற்றும் அனுபவச் சான்றிதழ்களும், பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளும் உறுதிப்படுத்தாமல் கோப்புகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் என்பதாக.	கோப்புகளை முறையாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துலத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 06 ஆம் அத்தியாயத்தின் 6.6 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 290 நாட்கள் கடந்த பின்னர் 2025 திசெம்பர் 16 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வரைவு ஆண்டறிக்கையும் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் உரிய பதவிகள் உருவாக்கப்பட்ட பின்னர் இச்செயற்பாடுகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக.	குறித்துரைக்கப்பட்ட திகதியில் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைநிதி யாண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) உப பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.4 பந்தியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவும் நிறுவப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பில் பதவிகள் உருவாக் கப்படவில்லை என்பதாகவும் எதிர்காலத்தில் பதவிகளை உருவாக்கும் போது உள்ளக கணக்காய்வுப் பிரிவினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 கணக்காய்வு குழு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2(h) பந்தியின் பிரகாரம் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் பொறுப்பினால் மீளாய்வாண்டில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்